420

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை





மலர் 28 | பிங்களஹு புரட்டாசி இதழ் 1௳ [17—9—'77] | இதழ் 9


நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# ஜோதிடமும், அதன் கணிததத்துவத்தில் நாமும்


இராம. குமாரசுவாமி

தலைவர்

சைவப்பிரகாசவித்தியாசாலை

உடன்குடி

நெல்லைமாவட்டம்.

ஆன்மீக அனுபவக் கண்ணுள்ளோரே!அல்லது செவி தருவோரே! வேறென்ன? செவி தருக! சிந்தியுங்கள். செயல் பெற முயற்சியுங்கள். அம்மட்டே!

உண்மையிலேயே! இத் தலைப்பில் கண்டிருக்கிற ஜோதிடம் அதன் கணித தத்துவம் என்பதுவே! அதாவது ஜோதிடத்திருந்தே தான் கணிதம் என்ற தத்துவக் கணக்கு நூலை, அனுபவ முறையில் கண்டு நம் மூதாதைகளால் கருணையுடன் எடுத்தோதப்பட்டிருக்கிறது, என்பது தானே! பொருள்! இருளிலிருந்து எடுத்தவைகளல்ல. இக் கணக்கு! இதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது. ஆனதால் எங்கும் நிறைந்தும், எல்லா உயிர்களுக்கும், உயிர் ஊட்டும், பிரகாசம் ஒன்றிலிருந்தே தான் நமது பிறப்பு முதல் இடைவேளை சரித்திரங்களும், அப்பால் மறையும் வரை எல்லா நிகழ்ச்சி வரலாறுகளையும் அப்படியே வரிசை வரிசையாக சங்கிலித் தொடர்பு போல் வாழ்க்கையின் அமைப்பின் வண்ணத்தைக் காட்டுவதே! கணிதம் என்பது! இவை நமக்கு காண்பித்த இயற்கை அமைப்பின் வழி. அதுவும் எப்படியமைந்தது, அமைத்துயிருக்கிறதென்றால், ஓராண்டிற்கு பனிரெண்டு மாதங்கள் என்றும், இதையே இரு சாரார்களுக்கும். இரு பிரிவுகளாக பங்கீடு செய்யப்பட்டுஜெனன தோற்றங்கள் அமைந்ததை அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இப்பன்னிரண்டு மாதங்களுக்கும், எத்தனை நாழிகை என்பதை அறிய வேண்டியதாயிருக்கிறது. அது இருபத்து ஓராயிரத்து அறுநூறு நாளிகை என்பது அதன் கணக்கு. இம் மொத்தமான நாழிகையைத் தான் இரு கூறுகளாக போடப்பட்டிருக்கிறது. இது இயற்கையின் கணித தத்துவ அமைப்பு தோற்றுவாயுங் கூட. இரு கூறுகள் என்றால் என்ன? மாதா, பிதா இவ்விரண்டுமே தான். வேறென்ன? இதில் மாதா எனும் சுரோணித பூமியிலும், பிதா எனும் சுக்கில வித்திலும், விழைந்து எழுந்ததே கரு. உரு 21600 எண்.

இம் மொத்தமான இலக்கத்திலே தான் இரு பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதை பாரம்பரியமாக என்றென்றும் செயல்படுவதில், எவ்வித மாற்றமுமில்லாமல், பேசுந் தெய்வமான மனிதர்களின் செயல் உடையோர்களுக்கு உரியதாகவும், இம் மேலான உயிருள்ள இக்கணக்கை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது. அதிலே தான் 18,000மும், 3,600ம் ஆக மொத்த நாழிகை 21,600. இதுதான் தத்துவ கணித கணக்கு. சரி.

இதை யார் யார் எதை எடுத்துச் செயல்படுத்தக் கடமையும், உரிமையும், பட்டவர்கள் என்பதை தெளிவு பெற காண்போம். மனக்கண்ணை தயார் செய்யுங்கள்.

இதில் சுரோணித மாதா 18,000மும், பாரம்பரியமாக அன்று முதல் இன்று வரை, எவ்வித மாற்றமுமில்லாமல் செயல் பெற்றுக் கொண்டிருக்கிறது. இவை மறுக்க முடியாத உண்மை. இந்த நிலையில் இதே போன்று சுக்கில பிதாவில் 3,600ம் என்றைக்காவது? யாராவது? பாதுகாக்கப்பட்டிருக்கிறதா என்று கடுமையான கேள்வி எழுகிறது? யாரும் பாதுகாக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டே! இதுவரை பிதா என்ற ஆண் உலகத்தை நோக்கி கடுமையான எச்சரிக்கையும் செய்து கொண்டிருக்கிறது. இதில் ஒழுங்காய் சமைத்துக் கொண்டிருப்பது யார் தெரியுமா? சுரோணித மாதாவால் தான். 18,000ம் நாளிகை உருவாகித் தோற்றுவிக்கப்படுகிறது என்பதுதான். உண்மை! ஆனால், மீதமுள்ள 3,600 நாளிகையை பிதா என்னும் சுக்கில வித்தை அதன் நிர்ணயப்படி பாதுகாத்து சேமித்து வைக்கப்பட்டு, சுரோணித மாதா என்ற பூமியில் வித்திடப்பட்டிருக்கிறதா? என்பதே இது சமயக் கடுமையான கேள்விக் குறியாகவும்' பிரச்னையாகவும், தொனித்து, எங்கேயோ

மறைந்து ஒலிக்கிறதே! ஏ! மனித பேசுந் தெய்வமே! நீ இதைச் செய்தாக வேண்டாமா? இதை அனுபவமுள்ள பெரியோரிடமாவது அணுகி, அவர்கள் அடிபணிந்து, சொள்ள வேண்டாமா? உனது வாழ்வோ நீரிற் குமிழி என்பதை மறந்து சணப்பொழுது என்பதையும் தெரிந்து இருந்தும், அதையும் மறந்தும். சாகா வரம் பெற்ற மாதிரி எவ்வித அடிப்படைக் கொள்கையுமில்லாமல்; அநியாய மாய் மாண்டு விடுகிருயே!

கடந்த நூற்று இருபது ஆண்டுகள் வாழ்ந்து வந்த உயிர் அணு ஒளி உன் உடலோடு இணைந்து இசைந்து செயல் பெற்றது ஒன்று, உன்னை அறியாமல், உன்னிடம் அனுமதி பெருமல், யாருக்குமே தெரியாது. உடலை கீழே தள்ளிவிட்டு வெளியேறி விடுகிறதே! வெளியேறுவதற்கு முன் அவ்வழியாப் பொருளை நண்பனுக்கி வழிவகை தெரிய முடியாமல், பொறுப்பற்ற முறையில் இருந்து விடு கிருயே! உன்னை மனிதனுக அதுவும் பேசும் நடமாடித் திரியும் தெய்வமாக எப்படி உன்னைக் கணிப்பது? தவிரவும் 3,600 நாளிகையை உனக்குள்ளதை, நீ அச்சுக்கிலவித்தை சேதாரப் படுத்தப்படாமல், பாதுகாக்கப்படாமல், எப்பொழுதாவது. வெறி வந்த அலங்கோல சமயத்தில் ஏன்? பரிகாசம் போலவே கடித்த பாம்பு பலபேர் அறியவே மெத்த வீங்கி பரிகாரமொரு மாது பார்த்த போதே பையோடே கழன்று தென்று ஆடு பாம்பே என்ற பொறுப்பற்ற வாசகத்தைத் தானே! நீ அமுல் படுத்தினுய்? இறுதி காலம் வரை கருணையுள்ளம் வேதனையடைகிறதே!

உன்னை இதனுல் மனிதப் பிறவி என்று வேத சுருதி களும், பெரியோர்களும், எவ்விதம் அழைத்துக் கூற முடியும்? நீ தவறி விட்டாயே! இம் மாதிரி மனிதப்பிறவி யிலிருந்து உன்னுல் என்ன செய்து விட முடியும்? என்ன

செய்து விட்டாய்? இதுவரை வீண் ஜம்ப பேச்சுத்தானே? பேசிக் கொண்டு காலத்தை வீணுக்கிச் செத்து மடிகிருய். இதுவா மனிதத் தன்மை? 10ம், 2ம் மாதங்களாக நம் பிறவியை வைத்துத் தானே இக் கணித தத்துவம்! இவ்விரண்டையும் சேர்த்துத்தானே உலகமெலாம் பன்னிரண்டு மாதங்களே! ஓராண்டு என எல்லா தேச சாத்திரங்களிலும் எல்லா மதங்களிலும், எல்லா மொழிகளிலும் எங்ஙனம் பேசப்படுகிறதே! இந்த உண்மையையாவது தெரிய வேண்டாமா? எங்காவது ஓராண்டிற்கு 10 மாதங்கள் என்ரோ, 14 மாதங்கள் என்ரோ இடம் பெற்றிருக்கிறதா? இல்லையே! ஆனதால் மாதா, பிதா இவ்விருவரையும் நிர்ணயமுள்ள செயல் முறைகளை வைத்தே தான் பன்னிரண்டு மாதங்களையும், பன்னிரண்டு இராசிகளாக, (சட்டிட கட்டங்களாக) அமைத்துக் கொண்டு எண் சாண் உடம்பை மாதா, பிதா இருவர்களும் உருவாக்கினர்களே!

அவ்வுடம்பினுள் ஒன்பது ஒட்டை (நவக்கிரகம்) ஒரு சாணில் ஏழும், 7 சாணில் 2ம் ஆக ஒன்பது கணக்கு. (அமிர்தம் 7ம் சாக்கடை 2ம்) இவை யாரும் தெரியக் கூடிய (சொன்னுல்) சுட்டிக் காட்டப்பட்டால் தான் ரகசியம் இல்லாதொன்று தானே! சரி. இருக்கட்டும். இவ்வொன்பதுக்குள் அடக்கமாக ரகசியமாக இயந்திங்களை யாரால் அறிய முடியும்? இதையும் கூட வெளிப்படையாக ஒரு விதத்தில் புரோகித சாஸ்திரிகள் 108ஐ அஸ்டோத்திரம் என்றும் 1008ஐ அந்த பெரும் ரகசியத்தை சகஸ்திர நாமம் என்றும் ஆலயத்தில் அர்ச்சனை செய்கிருர்கள். அங்கு சொல்லப்பட்டவர்களுக்கே இதுவரை விபரம் தெரிய முடியாமல் காவியமாக அமைத்து வாயால் (மனக் கண்ணுலல்ல மனித ஆலயத்திலுமல்ல). மந்திர அர்ச்சனை என்று ஓசை ஒலியுடன் முழுக்க முழுக்க மற்ற ஏனையோர்

களுக்காக ஓலமிடுவதை பார்க்கிறோம். எங்கும் ஓசையும், ஒலியும் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை கேட்க வேண்டாமா? கண்ணால் பார்க்கத்தான் வேண்டாமா? ஏன்? கொள்கை பிடிப்பில்லாத விழிகண் குருடர்களாய் மனப்பாடம் பண்ணி வெறும் வாயால் சொல்லிக் கொண்டு இருப்பது ஓசை ஒலியாகுமா? என்பதே கேள்வி? 108ம், 1008ம் எங்கே என்ன வடிவத்தில் அமைந்து ஒலித்து செயல் பெற்று நம்மை நடத்திக் கொண்டிருப்பதை வாயால் சொல்ல இவ்வுலகில் மொழி எது? கண்களால் அல்லவா காண வேண்டும், வழிகாட்டி அல்லாது அவ்வூர் வழி போக முடியாது. ஆனதால் வழிகாட்டும் ஞானகுரு வந்தாக வேண்டும். வாயால் சொல்லும் உபதேசம் இல்லையிது! இந்த 10, 2ம் 12ல் 9 நவதுவாரங்களைக் கொண்டு கணக்கிடப்பட்ட கணக்கைத்தான் அன்று முதல் இன்று வரை சோதனை செய்து கொண்ட கணிதங்கள் பரம்பரை பரம்பரையாக ஒருவர் பின் ஒருவரை பின் தொடர்ந்து கற்றதை மனப்பாடம் செய்து வழக்கமாக காட்டி, ஏனையோர்களுக்கு பலாபலன்களை தெரிவிப்பது சரி! ஆனால் இதன் ரகசியம் தெரியாமல் தெரிந்தவர்களிடம் அணுகாமல், அதன் பரிபாஷைகளை காண முடியாமல் தவறாக நாள் ஒன்றுக்கு 21,600 சுவாசம் என்று நம்பி மோசம் போனவர்கள் பலர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பிராணயாமம் என்று சொல்லப்படும். யோகாப்பியாசத்தை நீண்ட காலமாக அனுஷ்டித்து வந்த யோகீஸ்வரர் ஸ்ரீ கடப்பை சுவாமி அவர்கள், தான் செய்து வந்த பிராணயாம யோகத்தைப் பற்றி 1வது பாகம், 2வது பாகம் என்ற நூல்களின் மூலம் தன் அனுபவத்தை வெளியிட்டு மற்றவர்களையும் இப்பிராணயாம யோகத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி அனுஷ்டிக்க வேண்டும் என்று உப

தேசக் கட்டளை பிறப்பித்த அவர்களே! தன் அனுபவ முதிர்ச்சியாலும், கடவுள் அருளாலும், உண்மை அருளை ஞானகுரு வழிகாட்டியதின் பேரில் கண்டபின் முன் செய்து வந்த (மூச்சு) பிராணுயாம யோகத்தை மறுத் திருக்கிறுர்களே! வரவேற்கிறோம்.

தத்துவ நூல்கள் எல்லாம் முறையிடுவதென்ன? காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார்யிங்குயில்லை என்று வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது, கண்ணுல் காண முடியாத காற்றையா? எண்ணிக்கையால் நிர்ணயிப்பது? சிந்திக்க வேண்டாமா? பரிசீலனை செய்ய கூடியவ னல்லவா மனிதன். உண்மையிலேயே இவ்வளவு தெளிவுப் படுத்திச் சொன்ன பிறகாவது, 21,600மீ நாழி கையா அது சுவாசமா? (மூச்சா) என்பதை சிந்தனை செயலுக்கு கொண்டு வரக் கூடாதா? என்பதே! கேள்வி? மேலும் மூச்சென்னடா செய்யும்? நரகிற் தள்ளும். மோச மது போகாதே! முக்கால் பார் என்று அடித்துப் பேசப் பட்டதையாவது கேட்டிருப்பாயா. நீதான் பெரியோர் களைத்தான் மதிப்பதில்லையே! அவர்கள் சொல்லி வைத்து விட்டுப் போன நமக்குள்ள பொக்கிஷத்தை கருணையுள்ள தெளிவை கையால் தொடுவதில்லை. பார்ப்பதே இல்லை. படித்தாலும் பக்கம் நின்று கேட்பது இல்லை, இணங்கி, வருவதில்லை. அது மட்டுமா? மறுத்து விடுகிருய்! நீ மனித ஜென்மந்தானு? என்று கருணையுள்ள பெரியோர்கள் புலம்பியிருக்கிறுர்களே! மேலும் ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற உயிரினங்களெல்லாம் கூடிக் கூடி ஒன்ருெடொன்றுயிணைந்து சென்று வாழ்கிறதை காண் கிருயே! ஏ மனிதா நீ கூடி வாழ்ந்தாயா? வாழ்கிருயா? வாழ்வாயா? எப்படி கேள்வி உன்னை நோக்கி வேதங்கள் முழக்கும். மனிதனுக உன்னை தோற்றுவிக்கப்பட்டதில் கருணையுள்ள உள்ளத்தோடு மனிதனுகவே கூடி வாழ்ந்து

வருவாயானுல், வம்புகள் ஏது? வழக்குகள் ஏது? நீதிஸ்தலம் எற்றுக்கு? காவல் துறைதான் எற்றுக்கு? வீடுகளுக்கு பூட்டியடைத்து வைக்கும் கண் மூடித்தனமான பூட்டுகள் தான் எற்றுக்கு? ஏன் இவ்வளவு, கோளாறுகள். மனிதனுக உன்ஊ உற்பத்தி செய்யப்படுவதில்ஊ. மனிதனுக வாழவும் அதனுல் முடிவதில்ஊ. உன்ஊச் சொல்லி என்ன குற்றம், எல்லாம் அடிப்படை கோளாறுகளே! அம்மட்டா! மனிதத் தன்மையும், அதன் உயர்வையும், தெரிய முடியாமலிருப்பதின், காரணமாக (தெரிந்து கொள்ள மனமில்லாமல்) பல பல கோடான கோடி எண்ணங்கஊ அனுவசியமான பேராசையின் காரணமாக தன்னில் வைத்துக் கொண்டதால் சாக வேண்டிய காலத்தில் நிம்மதியாக சாக முடியாமல், நாள் தவருமல், சாகாமல் செத்து செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிருயே! எற்றுக்கு? இதைத்தான் நம் மூதாதைகள் நம் அவல நிஊக் கண்டு ஓலமிட்டிருக்கிருர்கள், அதை அனுசரித்தே தான் உன்னுள் அடக்கமாக நவத்துவாரங்களில் அத் தத்துவக் கருவிகள் அன்ருடம் செயல் பெற்றுக் கொண்டிருப்பதை கணித மேதைகளால் கணிதமூலம் சொல்ல கேட்டோமா? இன்னமும் திருந்தாமலிருக்கிருய்? ஏன் இவ்வித கோளாறுகள்? சிந்தஊ செயலுக்கு கொண்டு வந்திருந்தால் 10 யாருக்கு (18,000) 2 யாருக்கு (3600) என்பதை இத்தஊ காலமும், உணர்ந்து செயல்படுத்திக் கொள்ளவில்ஊயே! என்று கடமை உணர்வுள்ள உள்ளங்கள் வேதஊயும், கவஊயும் கொள்கிறது. உண்மையிலே உன் காலம் கடந்துவிட்ட தப்பா! ஆனுலும் உனக்குப்பின் தோன்றும் பரம்பரை வாரிசுதார்களுக்காவது, மேலே காட்டப்பட்டிருக்கிற உண்மை ஆதாரங்கள் அஊத்தையும் தெரிய வேண்டியவர்களிடம் அறிந்து தெரிந்து, தெளிந்து, செயல் பெற வேண்டும் என்பதே இம் முறையீடுகளின் எச்சரிக்கை! இம்முறை

யீடும், தெளிவும், இது சமயம் போதுமென்றாலும், ஒரு சிறு குறிப்பையும் மேலும் தந்து விடுகிறேன். தூண்டு தலால்! அதில் ஒழுங்கு முறைகளை கண்டு கொண்டா யானல் தானே நீ மரணமிலாப் பெரு வாழ்வைக் காணவும் அடையவும் முடியும்! இதன் விளக்க முறைகளின்படி பிதா விற்குரிய இலக்கண செய்தி திட்டப்படி, கட்டுப்பாட்டு டனயே நடக்கப்பட்டவர்கள் தான் அமைந்திருக்கும் விதி என்ற ஊழையும், அனுபவ செயல் மூலம் கண்டு வெல் லவும் முடியும்.

மற்ற ஏனைய முறை தவறியோர்களின் கடமை உணர் வில்லா பொறுப்பற்றோர்களுக்கு ஊழிற் பெருவலி யாவுள? என்ற சொல் தான் ஒலித்துக் கொண்டேயிருக்கும். ஆன தால் விதி என்னும் ஊழை அதன் வலிமையுள்ள அமைப்பை மாற்றித் திருத்தி அமைக்கும் சக்தியுடை யோர்கள் தான் மனிதர்களில் மனிதராகவும் முடியும். இவர்கள் தான் மரணமிலா பெரு வாழ்வை அடைந்து தேவாதி தேவர்கள் ஆவார்கள். இதுதான் வேத சுருதி களின் இறுதி முடிவு. இவ்வுலகில் மனித சட்டையை மட்டும் போர்த்திக் கொண்டு அலைபவர்களிலும் பற்பலர் உண்டு அவை யாவன. ஊர்வன, பறப்பன போன்ற நடமாடித் திரியும் விலங்குகளை போன்றவர்களே! இவ் வினங்களைக் கண்டு தெரிந்து மனித பண்பு உடைய வர்கள் விலகிக் கொள்ளவும் வேண்டும். மேலும் விளக்கம் தரப்படுகிறது! இம்மண்ணில் நன்செய், புன்செய்களில் எந்த வித்தை, எப்படியுள்ள வித்தை, எந்த பூமியில், எந்தக் காலப் பருவத்தில், எந்த நாளை தேர்ந்தெடுத்து, விதைக்க வேண்டுமென்பது அன்று தொட்டு இன்றுவரை எங்கும் பரவலாக நடைமுறையில் அமைந்திருக்கிற ஒரு நிர்ணயமான பழக்க வழக்கங்கள் ஆகும். இதை யாரும் மறுத்திட முடியுமா? இவைகளையெல்லாம் தெரியாமல்

பண்படுத்தப்படாத பூமியில் மனம் போக்கில் வித்தை விதைத்தால் வித்துதான் என்னவாகும்! அது பாழாகு மல்லவா? அது நஷ்டம் தானே! முதல் வீணுகி விடுவ தும், உண்மைதானே! இந்த நிலையில் பண்படுத்தி வித்துக்கென சேமித்து பாதுகாத்து வைக்கப்பட்ட வித்தை அதுவும், நாள்பட்ட வித்தை குறிப்பிடுகிற நிர்ணயித்து இருக்கிற நாளில் விதைத்தும், அப்பால் கவனமாய் நாள் தவருமல் அவ்வித்து முளை தோன்றுகிறதா? எனக் காண வும் அதை பாதுகாத்து வரவும் வேண்டும். பாதுகாப்பு என்ருல், அங்கு நாமும், அப்பூமியில் இறங்காதபடியே பறவைகள் ஆடு, மாடுகள், எலிகள் போன்ற நாச வேலைகள் செய்யும். கோளாறுகள் ஏற்படாமல் கண் காணித்து களையும் வந்தணுகாமல் பாதுகாத்து வரவும் வேண்டுமல்லவா? அப்படியானுல் தான் நாள் ஒரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாய், செழித்தோங்கி, அப் பயிரின் வளர்ச்சியில் அம் மகசூலை பூரணமாய் நல்ல முறையில் பெற முடியும் சரி.

உடல் மட்டும் வளர்ந்து வளர்ச்சியடைய, காரண மாகயிருந்த உணவுப் பொருளுக்கே! இவ்வளவு பாது காப்பும், முன் எச்சரிக்கையும் வித்தினமைப்பின் அளவு நிர்ணயமும், வேண்டும் என்றிருக்குமானுல், உன் உயிர்ப் பயிர்களுக்கு அதை விட நீ எவ்வளவு எச்சரிக்கையுடன் உன் நிர்ணயத்தை மாசில்லா கருணையுள்ள சுக்கில வித்தை எந்தனை நாளைக்கு சேமித்து வைத்து சுரோணித மாதா பூமியில் விதைத்தாக வேண்டும். உணர்கிருயா? தெளிவு ஏற்படுகிறதா? இவ்வளவு தெளிவையும் தொட்ட பின்ன ரும் மனதில் ஏறுகிறதா? சிந்திக்க வேண்டாமோ? என்று தான் செயல் பெறுவாயோ? நீ உனக்குள்ள 3,600ஐ மறந்து விடுவாயோ? இம்மாதிரி உண்மைகளை தெரிய முடியாமல் தெரிந்தவர்களிடம் அணுகாமல், வெளிப்

படையாக பள்ளிப் படிப்பை மட்டும் வைத்துக் கொண்டு மனப்பாடம் பண்ணி தெருப்பாடலாக ஆக்கி அதன் உட்பொருளறியாமல் தெரியாமல், தெளிவில்லாமல், வீணுக புலம்பி நீயும். கெட்டு பிறரையும் கண்மூடித்தன மான உபதேச மூலம் கெடுத்துக் கொண்டிருக்கிருயே! இது நியாயம் ஆகுமா? இது மனித உள்ளந்தாஞ? ஐயகோ! மேலும் ஒருஉண்மையைக் கேள். இம்மண்ணில் நெல் பயிர்வித்தை விதைத்து அதன் மகசூலே எடுக்கும் காலம்வரை மீதமுள்ள நெல் வித்தை அப்படியே செலவு செய்யாமல் அடுத்தபடி அடுத்த ஆண்டு விதைக்கத் தானே தயாரிலிருப்புக் கட்டிவைத்திருப்பாய்? மகசூல் அப்பூமியிலிருந்து வருவதற்குமுன் மீதமுள்ள வித்தை (விதைத்த வித்துப் போக) இடைவேளேயில் மேலும் விதைக்க மாட்டாயல்லவா? அது கூடவும் கூடாதல்லவா? இந்த நிலேயில் இம்மண் பூமியில் விதைத்த வித்தில் நல்ல முறையில் மகசூல் வரும்வரை காத்திருந்து அப்பூமியிலிருந்து மகசூலேப் பெற்று அடைய வேண்டும். என்பது தானே நீதியும், ஒழுங்கும், அப்படி எல்லாம் ஒரு சாதாரண இம்மண் பூமியில் விதைக்கும் வித்திற்கு இவ்வளவு சீரும், சிறப்பும், பாதுகாப்பும், கட்டுப்பாடும், ஒழுங்கும், இருக்கிறபோது உன் சுக்கில வித்தை அவ் வுயிர்ப் பயிர்வித்தை எத்தனே நாளேக்குப் பாதுகாத்து இம் மேலான படைப்பிற்கு வைத்திருந்தாய்?

மேலும் மாதா என்ற சுரோணித பூமியில் உனது சுக்கிலம் என்ற வித்தை என்றைக்கு விதைக்க வேண்டும் என்று நீ எப்பொழுதாவது நாள் பார்த்ததுண்டா? நீமனித இனமா? சரி. உன் உயிருள்ள வித்தை விதைத்தாயே! (வேண்டுமென்று விதைக்கவில்லேயே!) அதை கண்ணிமை போல் மகவு கிடைக்கும் வரை பாதுகாத்ததுண்டா? பொறுமையுடன், கடமையுணர்வுடன் கட்டுக்கோப்புடன்

இருந்ததுண்டா? உன்னால் முடிவதில்லை தானே! தெரியவும் தெரியாது, நீதான் நினைத்த பொழுது எல்லாம்நினைத்தபடி, உன்னை அறியாமல் அத்துமீறி (மீறவிட்டு) மேலும். மேலும், விதைக்கு மேல் விதையை சுரோணிமாதா பூமியில் சுக்கிலத்தை விதைத்துக் கொண்டிருந்தாயே அதுவும் என்றைக்கு விதைத்த சுக்கிலவத்தில் கரு உருவானது என்பதும் தெரியவராது. அதுவகையில் உனக்கு பொறுப்புண்டா? கடமை உணர்வுதான் உண்டா? இதுவரை எந்த உயிருள்ள நல்லவகைகளையும், செய்து சாதித்ததுண்டா? கருணையுள்ள உன் மூதாதைகள் கவலையுடன் உன்னை நோக்கி கேட்டுக் கொண்டிருக்கும் கேள்விகளே வேத சுருதிகள் உட்பட, அதுமட்டுமா? மாடுதானாலும் ஒரு போக்கு உண்டு என்று மனிதனுக்கு அத்தன்மையும் கிடையாது. அப்பா என்றல்லவா நமது பொறுப்பற்ற பேராசையைக் குறித்துக் கண்டித்து. கவலை அடைந்துள்ளார்களே! என்றுமனிதனாக வாழப்போகிறாய்? என்றெல்லாம் தவித்திருக்கிறார்கள். காரணமென்ன? பேசுந் தெய்வமான மனிதன் செய்ய முடியாதது இவ் வுலகில் ஏதுமில்லையே! அப்படியிருந்தும், ஆறு அறிவு பெறுமல், வேறு ஏதோதோ அனுவசியமாக வீணாக, காலத்தை கழித்து மனிதப் பிறவிப் பயனை தெரியாமல் அடையவும் முடியாமல் மண்ணோடு மண்ணாக செத்து மடிகிறாயே!

என்று மரணமிலாப் பெருவாழ்வைக் காணப் போகிறாய் என்ற கவலை மிகுதியால் தான் கண்டனுபவித்த உண்மைகளை எல்லாம் அன்னவர்களின் (நம் முன்னவர்கள் எல்லாம்) உடல் மண்ணிற்கு இரையாவதற்கு முன் ஆதாரபூர்வமாக வேத நூல்கள் மூலம் கருணையுடன் நமக்கு அறிவுரையும், தெளிவுரையும், தந்துள்ளதை

விளக்கமுள்ள பெரியோர்களைத் தெரிந்து அடக்கமுள்ள பரிபாஷையை தெரிவிக்கும்படி. கேட்டு அவர்கள் அடி பணிந்து, நடந்து மனிதர்களாக ஆக வேண்டுமென்பதே இம்முறையீடுகளின் வரிசைகள். இயற்கை அமைப்பின் உயிரினங்களின் ஆதி தோற்றத்தில் ஆண் முதிதோ, பெண் முதிதோ, என்ற ஐயப்பாட்டில், நம் மூதாதைகள் அதற்கு ஆதாரமில்லை என்றே முறையிட்டு, இருக்கிருர்கள். இந்த நிலையில் ஒருவனும், ஒருத்தியும் இணைந்திசைந்து முதல் தோன்றிய ஆதி மகவை பெறவில்லை. இது உறுதியான செய்தி. ஆங்காங்கேயுள்ள சீதோஷ்ணத்திற்கு தக்கபடியே இயற்கை கோளங்கள் ஒன்ருெடொன்று இணைகிற இயற்கையின் தன்மையில் ஒவ்வொரு உயிரினங்களும், எறும்பு முதல், யானை வரை (மனிதன் உட்பட) தான் தாஞக செயற்கையின்றி' உற்பத்தியாயிருக்கிறது. இதில் முதன் முதலில் தோன்றியது ஆணுக வைத்துக் கொள்வோம். பெண் இனம் தோன்ற இயற்கையின் விதிப்பிரகாரம் இடைக்காலம் எவ்வளவு என்பதை கணக்கிட முடியாது. அவ்விதம், கணக்கிட்டு நிர்ணயம் செய்ததுமில்லை. வேத சுருதிகளிலும் இடம் பெறவும் இல்லை. முன் தோன்றிய ஆண் காத்து இருக்க பின்னர் பெண்ணும் தோன்றியிருக்க, அப்பால் இவ்விருவரும் சந்திக்கும் சமயமே அங்கு உருவாகிறது! பற்றுப் பாசமும் ஏற்படுகிறது! அதன்பின் இருவரும் இணைந்து சென்று மகவைப் , பெறுகிருர்கள். மேலும் பெறத் தொடங்கி விடுகிருர்கள், இதைத்தான் நம் மூதாதைகள் வாழையடி வாழை எனவந்த திருக்கூட்டம் என்ற பேர்உண்மையைக் கண்டு சொல்லியிருக்கிருர்கள். இதற்கு பெயரென்ன? மக்கள் தோன்றி பெருகிக் கொண்டிருப்பதுவே கலியுகம் என்ற சொல்லும் ஏற்பட்டிருக்கிறது இக்கலியுகத்திற்கு முடிவே கிடையாது. காரணம் மண்ணும், விண்ணும், நீருப்,

காற்றும், ஒளியும் என்றென்றும் அழியாமல் இருப்பதால் கலிக்கிற உலகமும் இருந்தே தீரும். எப்படி? புற்றீசல்கள் போல கலகலென, பொலபொலன யோணிவாயில் உற்பத்தியாகாமலே அவ்வப்போது தோன்றி மறையும்' உதாரணமாக வாழைக்கு வித்திட்டது எப்பொழுது யார்? எந்த கால எல்கை வித்து உண்டா? ஆதாரமில்லேயே!. வித்து எப்படி இருந்தது என்ருவது, இதுவரை தெரிய முடிகிறதா? ஒரு தோட்டத்தில் எங்கேயோ ஒரு ஊரில் எப்படியோ ஒரு வாழை தோன்றியுள்ளது. அவ்வளவே! அவ்வாழை, குலே போடுவதற்கு முன் தன் பக்கத்தில் வாரிசுகளான வாழைக் கன்றுகள் பலவற்றை உற்பத்தி செய்து தயாராக வைக்கிறது. இது இயற்கை கடமையுள்ள தாய் வாழை குலே போட்டதும் அக்குலேயை பக்குவம் வந்தவுடன். நாம் வெட்டி விடுகிருேம். அதே சமயத்தில் குலே போட்ட தாய்வாழையையும், இனி பிரயோஜனப்படா தென்று, உடனே வெட்டி விடுகிருேம். ஆனலும் சுற்றிச் சூழவும், தோன்றிய பல வாழைக் கன்றுகளே பிடிங்கி (அப்புறப்படுத்தப்பட்டு) தோட்டம் பூராவும் பரவலாக வைக்கிருேம். அவைகளில் தோன்றும் பக்க கன்றுகளே பல தோட்டங்களில் நட்டுகிருேம். இதே தான் உலகம்பூராவும் பல ரூபா ரூபங்களில் அந்தந்தமண்ணிற்கு தகுந்தபடி, தோன்றி பரிணமித்து, பலாபலன்களே தருகிறது. இதுதான் உண்மை. இந்த நிலேயில் உடல் மறைந்து, உயிர் அணு ஒளி என்றைக்கும் அழியாமல்,, வாழ்ந்து பரம்பரையாக தோன்றிக் கொண்டிருப்பதை யாரும் மறுத்துவிட முடியாத ஒன்ருகும்.

எப்படியென்ருல் வாழையடி வாழையாக வந்தது போல் மேலும் அநேக இம்மாதிரி உண்மைகளே தெரிய முடியாமல், வேத சுருதிகளில் எல்லாம் ஓலமிட்டு, முறையிடுவதை நாம் காணமுடிகிறது. தவிரவும், எந்த மொழி

யிலாவது, பேசப்படுவதுதான் வேத சுருதிகள் இருப்பினும், நம் மூதாதைகள் தான் கண்டனுபவித்த பேர் உண்மைகளை அப்படியே பூர்ணமாக,கருணையிருந்தாலும், பிறருக்கு எடுத்துச் சொல்ல இவ்வுலகிலேயே மொழிகளில்லை. எப்படி? கனியின் ருசியையும், அதன் மனத்தையும், வாயால் சொல்ல முடியுமா? முடியாதே! அதுவும் ஒரு சான்று. பல ஆண்டுகள் உன்னுடனேயே ஒன்றிருந்த உயிரணு ஒளி உன்னை அறியாமல், உன்னுடைய அனுமதியில்லாமல் அவ்வுயிரணு ஒளி மறைந்து வெளியேறவிடக் கூடாதே! பல செயல்களை செய்தும் ஆட்டிபடைத்துக் கொண்டிருந்த ஒன்றை நீ இதுவரை நண்பனுக்கி கொள்ளவில்லையே! அதை நண்பனுக்கி கொள்வதுவே மரணமிலா பெருவாழ்வு கண்டீர். என்று நம் மூதாதைகள் முறையிட்டு இருக்கிருர்கள். சரி, அப்படி உன்னை அறியாமல், உன்னிடம் கேளாமல், உன்னிடம் சம்மதமன்னியில், திடீரென அவ்வுயிரணு ஒளி அணைந்து மறைந்து உன் சரீரமும், கீழே விழுந்து விட்டால் மற்ற ஏனைய விலங்குகளுக்கும், உனக்கும் என்ன பாகுபாடு? அப்படியானுல் அதைவிட எந்தவகையில் நீ மேலான பிறப்பு என்று உன்னுல் சொல்ல முடியுமா? முடியாது.

நீ சொல்லலாம் இயந்திரங்கள் செய்தேன், கப்பல் பறக்கவிட்டேன், ஏராளமான மக்களையும் பெற்றெடுத்தேன். (பொறுப்பற்ற முறையில்) என்ற போலி செயல்களையே செய்து வீணுகப் பேசி. என்ன பயன்? உனது பிறப்பிற்கு நீ என்ன செய்தாய்? என்பதுதான் கேள்வி. குறிப்பாக ஞான குருவை அணுகினுல், தான் தன்னையும், தன் உருவமும், அதன் உட்பொருளும், தன்முன் காண முடியும். எப்படி? தன்னை தெரிந்தவனே எங்கும் நிறைந்து எல்லா உயிர்களுக்கும், உயிரூட்டும் என்றைக்குமுள்ள தலைவனைக் காணமுடியும்! இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

பொதுவாக மனிதர்கள் விழிகண் குருடர்களாய் இருப்பது முறையல்ல. அக்கண்கள் இகத்திற்கும், பரத்திற்கும், பயன்பட்டாக வேண்டும். கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டமே! ஆனதால் நாம் வாழவும் பிறரை வாழச் செய்யவும் நம் முன்னோர்களின் கருணையின் ஆணைப்படி வாழ்ந்து காட்டுவதில் மரணமிலா பெருவாழ்வைஅடைந்து உய்வோமாக!.

தமிழ் வாழ்க! தமிழ் மறைகள் வாழ்க! தமிழினம் கூடி வாழ்க! தமிழ்நாடு வாழ்க! கொல்லாமை எனும் விரதம் எங்கும் பரவி, உலகமனைத்துமே வாழ்க! வாழ்கவே!!

---

(தொடரும்)

---

இக்கட்டுரையாளரின் ஆழ்ந்தகன்ற கருத்துக்களும் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளையும் ஆராய்ச்சி செய்து அவற்றில் புதைந்து கிடக்கும் நுணக்க தத்துவக் குறிப்புகளையும் விளக்கி நம் முதாதைகள் நமக்கு பல்லாற்றானும் அறிவூட்டுவதற்கென்று விட்டுச் சென்ற அரிய பொக்கிஷக் களஞ்சியங்களையும் எடுத்துக்காட்டி எளிய நடையில், சிறந்தமுறையில் உயர்ந்த கருத்துக்களை மிகத் தெளிவாக விளக்கியிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது.

கணிதமென்பதே நம்மில் பலருக்கும் இரும்புக் கடலைதான் அதிலும் ஜோதிடக் கணக்கென்றதும் தலை தானாகவே சுற்ற ஆரம்பிக்கும். அத்தகைய அரிய பெரிய விஷயங்களையும் கற்றோரும் மற்றோரும் ஆர்வத்துடனும், ஆத்திரத்திடனும் அறிந்து கொள்ள விருப்பத்துடன் விரைந்துவரும் வியக்கத்தக்க முறையில் இக்கட்டுரை அழகாக அமைந்துள்ளது.

கட்டுரையாளரின் செறிந்த பரந்த அறிவும், உலகானுபவ முதிர்ச்சியும், தன்னலங் கருதாச் சீரிய தொண்டுணர்வும், சலியாத உழைப்பும் வெள்ளிடைமலை.

—ஆசிரியர்.

436

[சிவசிவ

வையத்துள் வாழ்வாங்கு வாழ:

# காலந் தவருமை

பேராசிரியர், மது. ச, விமலானந்தம் அவர்கள்,
தமிழ்த்துறை மன்னர் சரபோசி அரசினர் கல்லூரி,
தஞ்சாவூர். (613005)

---

'காலம்' பொன் ஆகும்'. (Time is Gold) என்ருர் ஓர் அறிஞர். இன்னெருரு சான்ருேர் 'காலமே காசு' (Time is Money) என்ருர். காலம் என்பது, உண்மையிலேயே ஒரு பெறற்கரும் பரிசில்—ஒரு ரகசியப் பரிசு. ஒருநாள் என்பது. ஒரு சிறு வாழ்வாகும். எனவே அத்தகு காலத்தின் அருமை உணர்ந்து பெருமை புரிந்து அதனை மதித்துப் போற்றுவதே, ஆண்டவனுக்கு அடுத்தபடி, நாம் பேணும் பேண வேண்டிய அறநெறியின் ஆன்ற கோட்பாடாகும்.

நாம் கருதும் ஒவ்வொரு நொடியும், நம்மைவிட்டு நகர்ந்து கொண்டே இருக்கிறது. அஃதாவது நம் வாழ்வில் ஒவ்வொரு பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கின்றது. நம் வாழ்நாளும், கால அரக்கனின் நேரவாள், கொஞ்சம் கொஞ்சமாகக் கழிக்கப்பட்டு வருகிறது. இதனை வான் மறை தந்த வள்ளுவனுர்

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

(குறள் 334)

என்கிருர். விக்டர்யூகோ என்பாரும் இதனையே செப்புகின்ருர். இதனை உணரின், நம் காலத்தையும் போற்றிப் பயன்பெற முடியும், பிறருடைய பொன்னுன நேரத்தையும் மதித்து வீணுக்காமல் இருக்க இயலும்.

காலப் போற்றலின் உயிர்நாடி, காலந் தவருமையாகும். படித்தவர்க்கும், படிக்காதவர்க்கும்வேறுபாட்டினை விளக்கிக் காட்டுவதே, இக்காலந் தவருமை எனும்பண்பே யாகும். ஆங்கிலேயர்களின் அரும்பெரும் பண்பாடுகளில் தலையாயது இஃது எனலாம். குறிப்பிட்ட நேரத்தில் காண்கின்றேன் என்ருல், தலையே போயினும் தவருது மறவாது காண்பர். காத்திருப்பேன் என்ருல், கண்டிப்பாகக் குறித்தாங்கு காத்திருப்பர். ஆங்கிலேயர் அகிலமெல்லாம் கட்டியாண்ட திறத்திற்கும், இன்னும் உலகின் முன்னணியில் ஒளிர்ந்தற்கும் இவ்வரிய பண்பே உரிய ஏது எனலாம். ஒரு கூட்டமென்ருலும், பொழுது போக்கான திரைப்படமாகிலும் எதுவாயினும் சரி, சரியான நேரத்தில் தவருது தொடங்குவர். எவருக்காகவும் எதற்காகவும் காத்திருந்து காலங் கழித்து எதனையும் செய்யார்.

அதற்கு நேர்மாருனது நமது கால ஒழுங்கு! பொதுக் கூட்டமாயினும், அறிஞர் கூடுவதாயினும் சரி, 5 மணி என்ருல் 7க்கும், 8 என்ருல் 10க்கும் தொடங்குவதே பழக்கம்—வழக்கம்! அதனுல் Indian Punctuality என்ற மரபே தோன்றிவிட்டது. நமக்குக்கூட, ஆங்கிலேயர் கூட்டமென்ருலோ, ஆங்கிலத் திரையரங்கு என்ருலோ காலத்தோடு தொடங்கும் என்றும், நம்மவர் கூட்டமோ, திரையரங்கோ எனின் காலங் கழித்தே துவங்குவர் என்ற அசைக்க முடியாத எண்ணம் உருவாகி விடுகின்றது. நாம் கனதனவான்களுக்காகக் காலத்தைக் கழித்திருப்போம். ஆனுல் மேலை நாட்டின

ரோ, எவரெனினும் ஏன்கடவுளுக்காகவும்கூடக் காத்திரார் அவர்கட்குக் காலமே கருத்து! நேரமே நினைப்பு! பொழுதே போற்றுநிலை!

மேலை நாட்டவரிடமிருந்து நாம் பின்பற்றிப் போற்ற வேண்டிய பெரும்பண்பு கால ஒழுங்காகும் அதனை விடுத்துப் புறக்கோலங்களிலும் புகைப்பதிலும்அவர்களைப் பின்பற்றிப் பாழ்படுகின்றோம்! பின்பற்றிச் சிறத்தற்குரிய சீரிய சால்பு, காலந்தவருமையாகும்.

போற்ற வேண்டிய பண்புகளில், இக்கடுமையான காலந்தவருப் பண்பே, எளிய இனிய ஒன்றெனலாம். இஃது ஓர் ஊக்கு சக்தியாகவும் (Driving Force) உந்து சக்தியாகவும் ஒளிர்ந்து ஒவ்வொருவரையும் உயர்நிலைக்கு உய்க்கும் ஒண்மையதாகும். இப்பண்பு, பொதுவாக அனைவர்க்கும் அணிகலன்: சிறப்பாக வணிகப் பெருமக்சட்கு அமைய வேண்டிய ஆன்ற ஒன்று.

கால ஒழுங்கில்லை எனில், ஒருவரிடம் எவ்விதக் கனிந்த பண்புமே இல்லை என்று பொருள். குறித்த கால சட்டத்தில் குறிப்பிட்ட வேளையில் ஒருவன் கூறியாங்கு ஒழுகவில்லையெனில், அவன் எத்துணைதான் அறிவு வளமும் அன்பு நலனும் உடையராயினும், அவனைப் பற்றி உயர்வாக எண்ணவோ, சிறப்பாகக் கருதவோ முடியாது. எனவே ஒருவரின் உயர் அணிகலனாக ஒளிர்வது, காலந் தவருமை, இதுவே 'பண்பாட்டின் உரைகல்' 'பண்பின் முகப்பு' எனலாம்.

வாணிகத்தின் வக்கணையே முறைமை (Method) யில் தான் அமைந்துள்ளது. அம்முறைமையும், கால ஒழுங்கின்றி இல்லை எனலாம்.

காலஒழுங்கு என்பது, ஒருவகையில் கட்டுப்பாட்டோடு கூடிய தன் முயற்சி எனலாம். Punctuality is a form of self indulgence Robert Lynd.

இன்று காண்கின்றேன், இப்போது செய்கின்றேன் எனக் குறித்திடுகின்ருேம் (appointment) என்ருல் நாம் ஒருவருக்கு வாக்கால் கடமைப்பட்டிருக்கிருேம். (duty bound) கடன்பட்டிருக்கிருேம். (indebted, to) என்பது பொருள். காலத்தைக் குறித்தேன் என்ருல், காலந் தவருது கடமைப்பட்டிருக்கிறேன் என்று பொருள். ஆகவே எவ்வித ஏதுவாலும் உங்கள் நேரத்தை வீணடிக்கக் கூடாது என்பதாகும். ஏனெனில் காலம் பொன் போன்றது!

குறித்த வேளையில் குறித்தாங்கு ஒன்றை ஒருவன் செய்யவில்லையெனில் ஒருவரைக் காணவில்லையாயின்' அவனை உலகம் மதிக்கவும் மதிக்காது; அவனும் வாழ்வில் ஏற்றம் பெறவும் இயலாது. மாந்தன் மதிக்கப் பெறுவது, பதவியாலோ, பணத்தாலோ, படாடோபத்தாலோ, பகட்டாலோ அன்று: அவனது காலந் தவருக் கனிவினுலே தான் என்பது எவரும் மறக்கலாகாது மறக்கவும் ஆகாது.

ஓட்டப் பந்தயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஓடுவதில் என்ன இருக்கிறது? சரியான நேரத்தில் புறப்பட்டாலன்ருே, வெற்றி கிட்டும், எத்துணைதான் வேகமாக ஓடக்கூடியவராயினும், அறிவிப்பு கேட்ட அதேநேரத்தில் சட்டெனப் புறப்படவில்லையெனில், பின்தங்கவேண்டியது தானே! சரியாகப் புறப்படுவதுதானே சரியான வெற்றிக்கு அறிகுறி!

பொதுவாக வாழ்வில், சிறப்பாக வணிகவாழ்க்கையில் காலந் தவருமை போல் நல்லெண்ணத்தை நம்பிக்கையை உருவாக்குவது வேறென்றுமில்லை. கால ஒழுங்கின்மை போல் ஒருவனைப் பெரும் புகழிலிருந்து சரியச் செய்வது வேறு பிறஇல்லை எனலாம்.

ஒரு சமையற்காரனுக்கு வேண்டிய மிகமிக இன்றியமையாத தகுதி காலந்தவருமையாகும். குறித்த வேளையில் சமைத்து முடிக்கும் திறம் வேண்டும். அது போன்றே விருந்தினர்க்கு வேண்டிய வீரிய பண்பும், காலந் தவருமையே! விருந்துக்கு வருகிறேன் என்று கூறிக் காலந்தவறின், விருந்து புரப்பவர்க்கு எவ்வளவு நட்டம், எத்துணை இன்னல்!

தேர்வுக்கோ, விமானத்துக்கோ, ரயிலுக்கோ, காலந் தாழ்த்திச் செல்லின், இழப்புநமக்குத்தானே! திரையரங்கு கட்கு இரண்டு மணி நேரம் முன்பே சென்று காத்துக் கிடக்கும் மாணுக்கர், கல்விச் சாலைகட்கு வகுப்புகட்குக் குறித்த நேரத்தில் சென்று பயில்கின்றனரோ! இல்லையே! பின், பயில்வது எங்ஙனம்? பயின்று சிறப்பது எப்படி?

நெல்சன்பிரபு ஒருமுறை உரைத்தார் எப்போதும் கால்மணி நேரத்திற்கு முன்பே செல்வேன் செயல் படுவேன். அக்கால ஒழுங்கு என்னை உன்னத மனிதனுக்கி, உயர்நலம் எய்தச் செய்தது,

Punctuality made a man of me.


உலகுபுகழ் செகப்பிரியரும், ஒரு நிமிடம் காலந் தாழ்த்திச் செல்வதைவிட, மூன்றுமணி நேரம் முன்னே சென்று செயல்முடிப்பது சாலச் சிறந்தது என்கிருர்.

ஒருமுறை அமெரிக்கத் தலைவர் வாஷிங்டன் என்பார். தமது செயலர் காலந் தாழ்த்தி வந்தமை கண்டு வருந்த, தன் கைக்கடிகாரம் மெதுவாக ஓடியதுதான் காரணம்

என்று கூறிய செயலரிடம், 'ஒன்று நீ புது கடிகாரம் பெறு, அல்லது நான் ஒரு புதுச்செயலரைப் பெற வேண்டியது தான்' எனக் குத்தலாகக் குறிப்பிட்டார்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது' என்பதற்கேற்பக் குழந்தைகளிடம் இளமை முதலே கால ஒழுங்கு பற்றிக் கூற வேண்டும்: பயிற்சிக் கொடுக்க வேண்டும். எது செய்யினும் குறித்த காலத்தில் செயற்படச் செய்து பழக்குதல் வேண்டும்.

மனிதனை மனிதனாக மதிக்கச் செய்வது, ஆத்துமாவை மகாத்துமா ஆக்குவதும் இதுவே. ஆதலின், Better late than never என்ற நிலை மாற்றி, Better never late என்பதனைக் குறிக்கோளாகக் கொண்டுசெயல் படுவோம்! சிறப்போம்!! 'கால ஒழுங்கு சாலவும் நன்று'.



(சிவ சிவ

# சைவ சமயத்தின் மாண்பு 13

ஸ்ரீ—ல—ஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள், இளவரசு,
மதுரை ஆதீனம்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடி சேரா தார்" —10—

பிறவிப் பெருந்துன்பத்திலிருந்து நீங்கிப் பேரின்ப மாகிய வீட்டின்பத்தை அடையும் வழி யாதென்று நோக்கும்பொழுது, இறைவன் திருவடியை மனம், மொழி, மெய்களால் வழிபடுதல் ஒன்றே அதற்கு வழியின்றி வேறில்லை என்பதை மேற்கண்ட திருக்குறள் மூலம் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார். பிறவியை, கடலாக உருவகம் செய்து காட்டுவதன் மூலமாக நமக்கு அவர் பல உண்மைகளை உணர வைக்கின்றார்.

கடலானது, எல்லை இல்லாத அகலத்தையும் ஆழத்தையும் உடையது. அது முத்துப் போன்ற சில அரிய பொருள்களைத் தன்னிடத்தே கொண்டதாயினும், காற்றால் எழும் அலைகளையும், பல சூழல்களையும் முதலை, சுறுமீன் போன்ற பல கொடிய உயிர்களையும் கொண்டிருக்கிறது. அது போல நமது பிறவியும், எல்லையற்ற காலத்தையும் புல், பூடு, புழு, மரம், மக்கள், தேவர், விலங்கு போன்ற வகைகளில் எண்ணற்ற வேறுபாடுகளை உடையதாக இருக்கிறது.

கடலிலிருந்து முத்து முதலிய அரும் பொருள்களைப் பெற வேண்டுமானால், ஆழ்ந்த நீரில் உள்ள முதலை போன்ற பல கொடிய உயிர்களிடம் தப்பிச் சென்று பெறுவது போல, பிணி, பகை, வறுமை, முயற்சி, மூப்பு, இறப்பு முதலிய அளவற்ற துன்பங்களிலிருந்து தப்பியே செல்வம், நுகர்ச்சி என்னும் இன்பங்களைச் சிறிது பெறுதல் வேண்டும்.

கடலில் இருந்து முத்து முதலியவற்றைப் பெற்றோர், கரையை அடைந்தே இன்பம் அடைய வேண்டுமேயன்றி, கடலிலே இருந்து இன்பம் பெற இயலாது. கடலிலே இருப்பின், அதில் அமிழ்ந்து ஒழிதல் தவிர வேறு இல்லை. அதுபோலவே, பிறவிநிலையில் இருந்து கொண்டு, சிறிது ஐம்புலன்களை நுகர்ந்தாலும் பிறவியினின்றும் நீங்கினாலன்றி நிலைத்த இன்பம் இல்லை. இத்தகைய சிந்தனைகள் பலவற்றைத் திருவள்ளுவர் பிறவியைக் கடல் என்று கூறுவது மூலமாக நமக்குத் தருகின்றார்.

இப்படிப்பட்ட பெருந்துன்பங்கள் அடங்கிய பிறவி என்னும் கடலைக் கடந்து வருவதற்கு இறைவனுடைய திருவடி ஒன்றே புணையாகுவதன்றி வேறு இல்லை என்பதை மாணிக்கவாச சுவாமிகள் தனது திருவாசகத் திருப்பாடலில் மிக அருமையாக விளக்கி அருளியுள்ளார்கள்.

"தனியனேன் பெரும் பிறவி பௌவத்து எவ்வத்துத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன்றிக்
கனியை நேர்துவர் வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனி என்னே உய்யுமாறு என்று என்று எண்ணி
அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லல்
கரை காட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே"

—திருச்சதகம்— 27

என்பது அத்திருப்பாட்டு.

பிறவியாகிய கடலில் துன்பமாகிய அலைகளால் மோதுண்டு, மகளிராகிய காற்றுல் சுழற்றப்பட்டு, காம மாகிய சுருமீனின் வாயில் அகப்பட்டுக் கரையேறமாட் டாது இடர்ப்படும் நிலையில் அஞ்செழுத்தாகிய புணை தமக்குக் கிடைத்தது என்று அருளிச் செய்கின்ருர். இறை வனது அடி, இறைவனது அருள், அஞ்செழுத்து என்று எவ்வாறு கூறினுலும் பொருள் ஒன்றே. எனவே, பிறவி யாகிய கடலைக் கடக்க வேண்டுமானுல் அஞ்செழுத்தைத் தவிர வேறு புணை இல்லை என்பதே ஆகும்.

எங்கள் குருமகா சன்னிதானம் அவர்கள் "அஞ் செழுத்தை ஓது". அதை ஓதினுலன்றி, மனக்கவலைகள் தீராது. மனக்கவலையைத் தீர்க்க அஞ்செழுத்து என்ற மாமருந்தைத் தவிர வேறுமருந்து கிடை யாது. மனக்கவலை தீர்ந்தால்தான் படுத்தவுடன் தூக்கம் வரும். அது தீராவிட்டால் நிம்மதியான தூக்கம் இல்லை" என்று அடிக்கடி உபதேசம் செய் வார்கள். அந்த அஞ்செழுத்தை ஓதுவதற்கு, குருநாதர் மூலமாக தீட்சை பெற்று அவர் நமக்கு அருளிச் செய் கின்ற திருமந்திரத்தை எப்போதும் உரு ஏற்றிக் கொண்டே இருத்தல் வேண்டும். "உரு ஏற திரு ஏறும்" என்பார்கள். அப்படிப்பட்ட ஐந்தெழுத்தின் வலிவையும் வல்லமையையும் நமது முன்னேர்கள் — அருளாளர்கள் தங்களது வாழ்க்கையில் அனுபவித்து — தாங்கள் பெற்ற இன்பத்தை நாம் எல்லோரும் பெற வேண்டும் என்று கருணையுடன் கருதி நமக்குத் தெளிவாக அறிவுறுத்தி அருளியுள்ளார்கள்.

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்
தேனய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்தடியேற்கு—அருள் செய்தான்
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

திருவேசறவு —10—

என்று மாணிக்கவாசகசுவாமிகள், மிக அழகாக தன் அனுபவத்தைச் சுட்டிக் காட்டி அருளுகின்றுர்கள்.

அதே போன்று,

',சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே"

என்று திருமூல நாயனர் சிவ நாமத்தின் மகிமையை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறுர்.

சேக்கிழார் பெருமானே, அஞ்செழுத்தை எப்பொழுதெல்லாம் ஓத வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்து அருளுகின்றுர்.

நின்றுலும்-இருந்தாலும்-கிடந்தாலும்-நடந்தாலும்
மென்றுலும்-துயின்றுலும்-விழித்தாலும்-இமைத்தாலும்
மன்றுடும்-மலர்ப்பாதம்-ஒருகாலும் மறவாமைக்
குன்றுத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்"

என்பது அவர்களின் திருப்பாடல்.

வழிபடுவதற்கே கிடைத்தது இப் பிறவி. நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தனு, கரண், புவன போகங்கள் அனைத்தும், அவன் திருவடி பரவுவதற்கே என்பதனை சைவ சமயத்தின் தலைசிறந்த தத்துவ ஞானிகளில் ஒருவரான அருள்நந்தி சிவாச்சாரிய சுவாமிகள் தமது சிவஞான சித்தியார் நூலில் மிகத் தெளிவாக பல பாடல்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். எடுத்துக் காட்டாக,

"மனமது நினையவாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழும் செயல் அறமானுல் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும் செயற்கு முன்னிலே யாமன்றே"

— சி. சி. 114 —

என்பது அத்திருப்பாடல்.

பொதுவாக, உயிர்கள் அனைத்தும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை உடையதாக இருக்கின்றன. அந்த மும்மலங்களைக் களைய, குருவருள் வேண்டும். குருவின் உபதேசமே, மும்மலங்களாகிய உயிர் நோய்க்கு அருமருந்து. ஐம்புல வேடரின் அயர்ந்து வளரும் உயிரை குருவாகி வந்து ஆட் கொள்கின்ருன் இறைவன் என்பதை மெய்கண்ட தேவநாயனுர்,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு,
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

— சிவஞானபோதம் 8ஆம் சூத்திரம்

என்பதன் மூலம் நமக்கு எடுத்துரைக்கின்ருர். இப் பாடலுக்கு, அருள் நந்திச் சிவாச்சாரிய சுவாமிகள் தமது சிவஞான சித்தியார் நூலில் மிக விரிவான பொருள் தந்து விளக்கியருள்கின்ருர்.

ஒரு அரசனின் மகன் வேட்டைக்குச் சென்றபோது இளமையிலேயே வேடர் கைப்பட்டு விட்டான். வேடர்களோ ஐந்து பேர். வேடர் கூட்டத்திலேயே வளர்ந்து பெரியவனுகியும் விட்டான். அந்த அரச குமாரனே தான் வேடர் குடியில் பிறந்தவன் என்றே நினைத்துக் கொண்டிருந்தான். தான் அரசனின் மகனே என்ற உண்மை அவனுக்கு எப்படி விளங்க முடியும்? அரசன் ஒரு நாள் தனது பரிவாரங்களோடு கானகத்திற்குச்

சென்று தன் பிள்ளையைக் கண்டு கொள்கிருன். "நீ என் மகன்; வேடர் மகன் அல்ல; என்று உண்மையை அறிவுறுத்தி அழைத்துச் செல்கின்ருன். உண்மை உணர்ந்த அம்மசனும் பெருமை பெற்று அரசனுகிருன். இது போலத்தான் குருவருள் திறம் கூடுகிறது என்று அருள் நந்திச் சிவாவாச்சாரிய சுவாமிகள் எடுத்துக் கூறு கின்ருர்.

நமது உயிரானது ஐம்புல வேடர்களின் சுழலிலே புகுந்து தடுமாறுகின்றது. உண்மையான துணேவன் யார் என்று அறியும் ஆராய்ச்சி ஞானம் அதற்கு இல்லே. மயக்கம்; அதனுல் மலியும் துயரம். இத்தகைய உயிரை ஆளுதற்கு, இறைவன் அருட்குருவாகி வருகின்ருன். ஐம்புல வேடரிடமிருந்து அவ்வான்ம அரசிளங் குமரனேப் பிரிக்கின்ருன். மலமகற்றுகின்ருன். தன் மலரடிக் கீழ் வைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலரச் செய்கின்ருன்.

'மன்னவன் தன்மகன் வேடரித்தே தங்கி
வளர்ந்தவனே அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என் மகன் நீ என்றவாற் பிரித்துப்
பெருனமயொடுந் தானுக்கிப் பேணுமாபோல்
துன்னிய ஐம்புல வேடர் சுழலில் பட்டுத்
துணேவனேயும் அறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானுக்கி, மலரடிக் கீழ் வைப்பன்"

— சி. சி. 253 —

குருவருளால் விளேயும் இன்பம் கூறும் தன்மை உடையதன்று; பேச்சற்று நிற்கும் பேரின்பம் அது. குருவருள் இல்லேயென்ருல் சித்தம் ஒருவழிப்படாது. நிலே பெருது. பிறவிக் கடலில் புகுந்து விழுந்து அல்லல் உறும் உயிரைத் தெளிவித்து திருவடி இன்பம் நல்குவதுவே குருவருள், என்பதனேச் சைவ சமயம் உணர்த்துகின்றது

(தொடரும்)

4428

(சிவ சிவ

# மனிதப் பிறவியும் வேண்டுவதே

திரு, K. லெட்சுமணன் அவர்கள்,
106–J/மில்லர்புரம்,
தூத்துக்குடி

எல்லா அடியார்களும் பிறவாமை வேண்டும் என்றுவேண்டினுர்கள். ஆனுல் அப்பர் அடிகள் மனிதப் பிறவி வேண்டும் என்கிருர்.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்ருல்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே — அப்பர்

விண்ணம்பலத்திலும் பொன்னம்பலத்தில் ஆடுபவர் நடராசர். தமிழக மக்களின் உருவவழிபாட்டின் தலையாய படைப்பு நடராசர் திருவுருவம். இதில் மயங்கிய ஏனைய சமயத்தார்கள் திருடிக் கொண்டு தம் நாட்டிற்கு கொண்டு செல்கின்றனர். தூக்கிய திருவடி கொண்டு சிவபெருமான் நடனமாடியது ஏன்?

தாருக வானத்து முனிவர் கர்வம் கொண்டு சிவனை மறந்து தவிர்த்து யாகம் செய்தனர். சிவபெருமான் பிட்சாடராகவும், விஷ்ணு மோகினியாக வேடம் கொண்டு சென்றனர். முனிவர்களும், ரிஷி பத்தினியர்களும் கடமையை மறந்ததால், முறை தவறிய முனிவர்கள் பலனை இழந்தனர். பின்னர் ரிஷிகள் சிவபெருமான் மீது கோபம் கொண்டு, அவரை மாய்க்க புதிய யாகம் துவக்கி, அதன் மூலம் புலி, பாம்பு இவற்றை தோற்றுவித்து

அவரை ஏவி விட்டனர். புலியைக் கொன்று புலித்தோலை ஆடையாக அணிந்தார். பாம்பை கழுத்துக்கு ஆபரண மாக்கிக் கொண்டார். கோபமும், ஆனந்தமும் மாறி, மாறி வந்ததால் சிவபெருமான் நடனமாடினார். ஆட்டத் தின் இடையில் முனிவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட அறியா மையின் மொத்த உருவமான முயலகன் என்ற அரக் கனையும் காலுக்கிடையில் அமிழ்த்தி அடித்தார். அவர் அகந்தையை வெல்ல, அறியாமையை ஒழிக்க, ஆண வத்தை விரட்ட, அறிவு ஒளி கொடுக்க நடனம் புரிந்து அடியார்களுக்கு ஆனந்த தாண்டவமாடி அன்பையும் அருளையும் காட்டுவதற்காக சிவபெருமான் நடன மாடினார்.

| | | |
|---|---|---|
| திருவாரூர் | — | அசபா நடனம் |
| திருநள்ளாறு | — | உன்மத்த நடனம் |
| நாகப்பட்டினம் | — | பாராவாராதரங்க நடனம் |
| திருக்காருயில் | — | குக்குட நடனம் |
| திருவாய்மூர் | — | கமல நடனம் |
| திருமறைக்காடு | — | ஹம்ஸபாத நடனம் |

ஆகியவை விசேட நடனங்கள்.

திருவாலங் காட்டில் உள்ள திருவுருவம் ஈடு இணையற்றது. இங்கு ஊர்த்துவ தாண்டவக் கோலத்தில் காட்சி அளிக் கின்றார்.

நடராஜரின் ஆட்டத்தைச் சிறப்பாகக் காண ஐந்து சபைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| தில்லை | — | கனகசபை |
| திருவாலங்காடு | — | ரத்ன சபை |
| திருவாலவாய் | — | வெள்ளி சபை |

திருநெல்வேலி — தாமிர சபை
திருக்குற்ருலம் — சித்திர சபை

## நடராஜர் திருவுருவத்தின் அமைப்பு

வலது காலினுல் முயலகன் மீது மிதித்து இடது காலே மேலே உயர்த்தி, ஒர் இடக்கையால் தூக்கிய பாதத்தைக் காட்டி, மற்ருெரு இடக்கையால் அக்கினி தாங்கி, ஒரு வலக்கையில் அபயஹஸ்தம் பிடித்து, மற்ருெரு வலக் கையில் உடுக்கை பிடித்து நிற்பதாக நடராஜரின் திரு வுருவம் அமைந்துள்ளது.

நடராஜருக்கு வருடத்திற்கு ஆறு அபிடேகங்கள் நடை பெறுகின்றன. மார்கழி—திருவாதிரை, சித்திரை —திரு வோணம், ஆனி—உத்திரம், ஆவணி, புரட்டாசி, மாசி ஆகியமோதங்களிலும் வளர்பிறை நாட்களிலும் அபிடேகம் நடைபெறுகின்றது. அவற்றை இந்த தனிப்பாடல் மூலம் அறியலாம்.

சித்திரையில் ஒணமுதற் சீரானி உத்திரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும் — பத்தி வளர்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசி மன்(று)
ஈசரபிஷேக தினமாம்.

திருநல்லம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கூத்தபெருமான் திருவுருவங்களே உலகிலேயே மிகவும் பெரிய திருவுருவங்களாகும்.

நடராஜரின் ஆனந்தத் தாண்டவம் பஞ்ச கிருத்திய தாண்டவம் ஆகும். இது ஆக்கல், அளித்தல், அழித்தல் மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலே நன்கு விளக்கு கின்றது.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு"

மாயை அகற்றி, வினைகளை தொலைத்து, மலங்களை நீக்கி மோட்சத்தை தருவது நடராஜரின் நடனம் ஆகும். கீழ்க் கண்ட பாடல் இதனை விளக்குகிறது.

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டு மலம்
சாய அமுக்கி அருள் தானெடுத்து — நேயமுடன்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதம் தான்"

அணுக்கள் இயங்க, அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவன் நடன மூர்த்தியாக இருக்கின்றார். எனவே நடராசர் விக்ரகம் நடனமாடும் சொருபமாக உள்ளது. நாம் ஆனந்தமடைய, பிறவிப் பயனை அடைய ஆனந்த மூர்த்தியை வணங்க வேண்டும்.

# தமிழையா!

**பூவாழகன்** (காஞ்சிபுரம்)

[எடுப்பு]

மாமயிலேறி ஓடிவந்த முருகய்யா! —எந்தன்
மனக்கவலை தீர்த்துவிட்ட முருகய்யா! (மாமயிலேறி)

[தொடுப்பு]

குலமகனைக் காத்திடவே முருகய்யா; —நீ
குதித்தோடி வந்துவிட்ட தமிழையா! (மாமயிலேறி)

[முடிப்புக்கள்]

குன்றிருக்கும் இடமெல்லாம் முருகய்யா! எந்தன்
குறைவந்து எதிரொளிக்கக் கேட்டாயா!
அன்றுமுதல் இன்றுவரை முருகய்யா! —உன்னை
அனுதினமும் துதிக்கின்றேன் நானைய்யா! (மாமயிலேறி)

வெண்ணீரைப் பூசுகின்ற நெற்றியிலே!—உந்தன்
வெள்ளைமுகம் தழ்ந்திடவே காண்கின்றேன்
கண்ணீரை மல்குகின்ற பக்தர்களின் —மனக்
கவலையினைத் தீர்த்திடவே வேண்டுகின்றேன். (மாமயிலேறி)

அமிழ்தமாக இனிக்கின்ற தமிழுக்கு - உன்னை
அந்தநிலவனுயப் போற்றுகின்ற பாருக்கு
உன்னைநாடுகின்ற மனிதருக்கு - நீ
உவகையுடன் வரமளிக்க வேண்டுகின்றேன். (மாமயிலேறி)

சிவ சிவ)

# உயர்ந்த உள்ளம்

வித்துவான் கோ. கோவிந்தசாமி.
தமிழாசிரியர்,
திருமுக்கூடல் (அஞ்சல்)
செங்கற்பட்டு மாவட்டம்.

---

ஆதனூரில் மிக்க செல்வம் படைத்தவர் அருணாசலம். எப்போதும்-முருகா முருகா என்று முருகப்பெருமானைப் அழைத்தவண்ணமிருப்பார். நெற்றியில் திருநீறு அணிந்து புன்னகையுடன் அவர் பிறரிடம் உரையாடும் போது முருகனடியார் என்றால் இவரையல்லவா சொல்ல வேண்டும். இவர் முருகன் பால் கொண்ட அன்பே அன்பு என்று மக்கள் வியப்புடன் கூறுவர்.

அருணாசலம் உண்மையில் ஆறுமுகப்பெருமானை உள்ளன்புடன் வழிபடுபவரா எனின் இல்லை என்றே அவரை நன்கு அறிந்தவர்கள் மொழிவர். முருகனடியார் வேடத்தில் பலதீய செயல்களையெல்லாம் அவர் செய்து வந்தார்.

முருகா முருகா என்று அவரின் வாய் கூறியவண்ண மிருக்கும். உள்ளமோ யாரை என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருக்கும். அவரின் வஞ்சகவலையில்

சிக்கியவர்கள் பலர். அவரிடம் சிக்கினேர் மீண்டும் தம திருப்பிடம் சென்றதில்லை அவரிடமே அடிமைகளாகப் பணிபுரிந்து வந்தனர். அவர்களுள் மாதவன் என்ற ஏழையும் ஒருவனுவான்.

தன் தந்தை உடல்நிலை சரியின்றி இருந்தமையால் அவரின் நோயைப் போக்குவதற்காக இருநூறு ரூபாயை அருணாசலத்திடமிருந்து பெற்ருன். தான் ஆயுள் முழுதும் அவரிடமே உழைப்பதாக எழுதிக்கொடுத்தான். அவரில்லத்தில் பணிபுரியத்துவங்கியபின் அவரைவிட்டுப் பல முறை விலகமுயன்றும் அவனல் முடியவில்லை. கடனுகப் பெற்றபணம் இருநூறு ரூபாயைக் கொடுத்து விட்டால் போகலாம் என்று கூறினர் அருணாசலம், பணத்தைத் திருப்பித்தர இயலாததால் அவரிடமிருந்து தப்பிச்செல்லமுயன் ருன் அதனை அறிந்த அருணாசலம் அவனைப் பிடித்துவருமாறுதன்-ஆட்களிடம் கூறியதோடு தூண் ஒன்றில் கட்டிவிட்டார். பணத்தைக்கொடுத்து விட்டுச் செல்லுமாறு கூறினர்.

மாதவன் முருகப்பெருமான் மீது எல்லையற்ற அன்புடையவன். அவரையன்றி தனக்கு வேறெவரும் துணையில்லை என்று கருதிவருபவன். அதனல் செந்தில் முருகனை எண்ணினன். முருகா. உன்னுடையபெயரைக் கூறித்தீய வழியில்செல்லும் அருணாசலத்தையும் அவரைச் சார்ந்தவர்களையும் நீதான் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும். உன்னையே நம்பி வாழும் என்னைக்காப்பாற்று. அருணாசலத்திடமிருந்து என்னை விடு வித்துவிடு. நான் சாதாரணமனிதனுக்கு அடிமையாக இருக்க விரும்பவில்லை

உனக்கு அடிமையாக இருப்பதையே விழைகிறேன். ஏழைகளுக்குஅருள்புரியும் தெய்வமல்லவா நீ. என் துயரை அகற்று ... முருகா ... முருகா ... என்று கூறியவாறு இருந்தான், அருணசலத்திஞல் தான் கட்டப்பட்டிருப் பினும் முருகன் தன்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. நீண்டநேரம் தூணுடன் பிணைக்கப் பட்டு நின்றிருந்ததால் களைப்பு அவனை ஆட்கொண்டது. எனினும் தன் நிலைமறந்து குன்றுதோறுடும் குமரனைக் கூவி அழைத்தவாறிருந்தான்.

தன்னையாரோ அழைப்பதுபோல் தோன்றவே நிமிர்ந்து பார்த்தமாதவன் தன்னெதிரே சிறுவன் ஒருவன் நின்றிருப்பதைக் கண்டான். தூயவெண்ணீறு நெற்றியில் மிளிர அவன் காட்சி அளித்ததைக் கண்டதும் மகிழ்ச்சி யுடன் யாரப்பா நீ என்ருன்.

முருகா என்று நீங்கள்தானே அழைத்தீர்கள்.

ஆமாம்.

என் பெயர் முருகவேள் ... முருகா என்று என்னைத் தான் அழைத்தீர்களோ என்று எண்ணி ஓடிவந்தேன்.

நான் அந்த வடிவேல் முருகனைத்தான் அழைத்தேன்

யாரை அழைத்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். ஆமாம் நீங்கள் ஏன் இங்கு கட்டப்பட்டிருக்கிறீர்கள்.

இந்த இல்லத்திலுள்ள செல்வந்தருக்கு நான் கடன் பட்டிருக்கிறேன். அதைத் தீர்த்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று என்னை இங்கே கட்டிவைத்திருக்கிருர்.

அப்படியா ... அவரை நான் பார்த்துவிட்டு வருகிறேன்.

இவ்விதம் கூறிய சிறுவன் விரைவாக உள்ளே சென்ருன்.

அருணுசலம் நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தார். சிறுவனைக்கண்டதும் யார் நீ என்ருர்.

நான் நெடுந்தொலைவிலிருந்து வருகிறேன். வெளியே தூணில் கட்டப்பட்டிருக்கிருரே ஒருவர். அவர் என்ன தவறு செய்தார்.

அவனு எனக்குத் தரவேண்டிய பணம் இருநூறு ரூபாயை தராமல் ஏமாற்றிவிட்டுச் செல்லப்பார்க்கிருன். அதனுல் பணத்தைக் கொடுத்துவிட்டுச்செல் என்று கூறி கட்டிவைத்திருக்கிறேன்.

பணத்தைக் கொடுத்துவிட்டால் விட்டு விடுவீர் களல்லவா ...

தடையே இல்லை ... எங்கே பணம் ...

இதோ ... பெற்றுக்கொள்ளுங்கள்.

சிறுவன் தன் சட்டப்பையிலிருந்து இருநூறு ரூபாயை எடுத்து அருணுசலத்திடம் கொடுத்துவிட்டு அவரைத் திரும்பியும் பாராமல் வெளியே சென்ருன்.

அவனைத்தொடர்ந்து சென்ற அருணுசலம் அவனுடைய செயல்களைக் கவனிக்க முற்பட்டார்.

சிறுவன் முருகவேள் மாதவனருகே சென்று அவனைத் தூணுடன் பிணைத்திருந்த கயிறை அவிழ்த்துவிட்டான். பிறகு உங்களுக்கு இங்கிருந்து விடுதலை கிடைத்து விட்டது என்ருன்.

என்ன? விடுதலையா ... என்ருன் மாதவன்.

ஆமாம்.

அருணுசலத்திற்குப் பணம் தரவேண்டுமே.

அப்பணத்தை நான் கொடுத்து விட்டேன்.

எனக்காக நீ பணம் கொடுத்தாயா ... உன்னை எப்படிப் புகழ்வது என்றே எனக்குத் தெரியவில்லை. முன்பின் அறிமுகமற்ற நீ எனக்குப்பணம் கொடுத்ததால் நான் உனக்குக் கடன் பட்டவனுகிவிட்டேன். அதை எப்படித் திர்ப்பது என்றுதான் தெரியவில்லை.

உங்களுக்கு உதவி செய்யவேண்டு மென்றுதான் செய்தனேயன்றி பலனை எதிர்பார்த்துச் செய்யவில்லை. நீங்கள் பணத்தைத் திருப்பித்தரவேண்டிய அவசியமில்லை நான் கேட்கமாட்டேன்.

முருகவேள் ... நீயார் ... உன் இருப்பிடம் எது? உன் தாய் தந்தையர்கள் எங்கே இருக்கிருர்கள் ... உன்னைப் பற்றி அறிய எனக்கு ஆவலாக இருக்கிறது. சொல்லப்பா.

என்னைப்பற்றி அதிகம் சொல்ல விரும்பவில்லை. எனக்கு எல்லா ஊரும் சொந்த ஊர்தான். நான் எங்கு மிருப்பவன். என் தாய்தந்தையர்கள் என்னிடம் மிகவும் பற்றுடையவர்கள். எனக்கு ஒரு அண்ணனும் இருக்கிருர். அவருக்கும் என்மீது அன்பு அதிகம். தாய்தந்தை யருடனே அண்ணனுடனே இருக்கஎனக்கு விருப்பமில்லை அதனுல் வந்துவிட்டேன்.

அவர்கள் உன்னைத் தேடமாட்டார்களா?

தேடி அலையட்டுமே ... எனக்கென்ன ...

அப்படிச் சொல்லாதே ... முருகவேள் ... நல்ல பண்புடைய நீ உன் தாய்தந்தையர் மனம் வருந்து மளவிற்கு அவர்களைப் பிரிந்து வரலாமா ... உன் இருப் பிடம் எது என்று சொல். நானே உன்னை அழைத்துச் சென்று விட்டு விட்டு வருகிறேன்.

வேண்டாம் என் தாய்தந்தையர் என் பிரிவிற்காக எப்போதும் வருந்தமாட்டார்கள். நான் எங்கிருப்பினும் நன்ருக இருப்பேன் என்று அவர்களுக்குத் தெரியும். என்னுடைய மனதிற்குப் பிடித்தவர்கள் யாராவது இருப்பின் அவர்களுடன் சிலநாட்கள் தங்கிவிடுவேன். உங்களை எனக்குப் பிடித்துள்ளது. வாருங்கள் போகலாம்.

சிறுவனுடைய பதில் மாதவனை வியப்புடையச் செய்தது. இவன் சிறுவன்தானு அல்லது அந்த முருகனே சிறுவனுக வந்திருக்கிருனென்று குழப்பமுற்ருன். எனினும் சிறுவன் பின்னே தொடர்ந்து சென்ருன்.

மாவதனையும் சிறுவனையும் கவனித்தவாறு இருந்த அருணுசலம் தன் அருகே நின்றிருந்த பணியாள் ஒருவனை நோக்கி சிறுவனும், மாதவனும் எங்கே செல்கிருர்கள் என்பதை அறிந்துவா என்ருர். பணியாள் அவர்களைத் தொடர்ந்து சென்ருன். சிறிது நேரங்கடந்தபின் அருணு சலத்தினருகே வந்து நின்ருன்.

சிறுவனும் மாதவனும் தற்போது இருக்குமிடத்தைக் கண்டாயா என்ருர் அருணுசலம்.

ஊர்க்கோடியில் உள்ள குடிசையொன்றில் இருவரும் அமர்ந்திருப்பதைப் பார்த்தேன். இன்று இரவு அங்கு தான் இருக்கப்போவதாகப் பேசிக்கொண்டார்கள் என்முன் பணியாள்.

உம் ... சரி ... நம் ஆட்களில் ஒருவனுன சின்ன தம்பியை அழைத்துவா ...

சரிங்க ... இப்போதே அழைத்துவருகிறேன்.

பணியாள் வீரப்பன் விரைந்து சென்று சின்ன தம்பியை அழைத்துக்கொண்டு திரும்பிவந்தான்.

என்னங்க ... நீங்க அவசரமாக அழைத்து வரச் சொன்னதா வீரப்பன்வந்து அழைத்தான். ஏதாவது முக்கிய வேலேங்களா என்முன் சின்னதம்பி அருணுசலத் திடம்.

ஆமாம் ... சின்னதம்பி ... என்னிடம் பல ஆண்டு களாக அடிமைபோல்வேலே செய்து கொண்டிருந்த மாதவனேக் கேவலம் ஊர்பேர் தெரியாத சிறுவன் ஒருவன் எனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்து மீட்டுச் சென்றுவிட்டான். சிறுவன் எனக்குப் பகைவன், அவனே உயிருடன் விடக்கூடாது ஊர்க்கோடியில் உள்ள குடிசையில் மாதவனுடன் தங்கி இருக்கிருன். இன்று இரவு அவனேத் தீர்த்துக் கட்டிவிடவேண்டும். என்ன சொல்கிருய் ...

தாங்களிடும் பணியைச் செய்ய நான்தயார் ... பயல் ஒழிந்தான் என்று நினேத்துக் கொள்ளுங்க நல்லசெய்தி

சின்னத்தம்பி தன் இல்லத்திலிருந்து வெளியேறியதும் சிறுவன் எப்படியும் ஒழிந்துவிடுவான் என எண்ணியவாறு உலாவிக் கொண்டிருந்தார் அருணசலம். இரவு முழுதும் அவர் உறங்காமல் சின்னத்தம்பியின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்தார்.

இரவு பன்னிரண்டு மணி அளவில் அவருரகே வந்து நின்ற சின்னதம்பி நீங்க சொன்ன வேலையை முடித்து விட்டேன். சிறுவனும் மாதவனும் தங்கியிருந்தகுடிசை யைத் தீக்கிரையாக்கிவிட்டேன். குடிசை தீப்பற்றி எரியும் காட்சியை நீங்கனேபாருங்கள். சின்னதம்பி அருண சலத்தை அழைத்துச்சென்று குடிசைஎரிந்துகொண்டிருப் பதைக் காட்டினன்.

அருணசலம் மிகவும் மகிழ்ந்தார். சின்னதம்பி நல்ல வேலை செய்து விட்டு வந்திருக்கிருய். நீ காலையில் என்னை வந்துபார் என்றுகூறி அவனை அனுப்பிவிட்டுத் தம் அறைக்குச் சென்று அமைதியுடன் படுத்தார். ஒழிந்தான் சிறுவன் என்று அவரின் உள்ளம் கூறியவாறு இருந்தது.

மறுநாள் காலையில் தம்இல்லத்தைவிட்டு வெளியே வந்த அவர் சிறிது தொலைவில் நின்றிருந்தவர்களைக் கண்டு திடுக்கிட்டார்.

சிறுவன் முருகவேளும், மாதவனும் அங்கே நின்றிருந்தனர்.

முருகவேள் அருணசலத்தினருகே சென்று என்ன அப்படிப்பார்க்கிறீர்கள். என்னைத் தெரியவில்லை நான் தான் முருகவேள் உங்களிடம் அடிமைபோலிருந்த மாதவன் என்பவரை மீட்டுச் சென்றவன்.

நீ எங்கே தங்கியிருக்கிருய்.

நான் நிலேயாக எங்கும் இருப்பதில்லே. நினேத்த இடத்தில் இருப்பவன். இரவு மாதவனும் நானும் வெளியூர் சென்றிருந்தோம்: காலேயில்தான் வந்தோம். நாங்கள் வழக்கமாகத்தங்கியிருக்கும் குடிசை தீப்பற்றி எரிந்து சாம்பலாகிவிட்டது. எப்படித் தீப்பிடித்தது. என்று தெரியவில்லே. இந்த ஊரிலேயே பெரிய செல்வந்தர் நீங்கள் தான் என்றும், உங்களுக்குத் தெரியாமல் எதுவும் நடக்காதென்றும் சொல்கிருர்கள். வீடு எப்படித் தீப் பிடித்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

சிறுவனின் கேள்வி அருணுசலத்தை அயரச்செய்தது எனினும் சினத்துடன் எனக்கு எதுவும் தெரியாது. என் எதிரில் நிற்காமல் போய்விடு. இனி இங்கே வராதே என்ருர்.

செல்வந்தருக்கு என்னவோ கோபம். என்று கூறிச் சிரித்தவாறு முருகவேள் மாதவனே அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

சிறுவன் தன் பார்வையிலிருந்து மறைந்ததும் அருணு சலத்தின் மனம் கொதித்தது. அப்போது அங்குவந்த சின்னதம்பியைப் பார்த்ததும் சின்னதம்பி ஆட்கள் உள்ளே இருக்கிருர்களா இல்லேயா என்பதை அறிந்து கொள்ளாமலேயே வெறும் வீட்டைத் தீக்கிரையாக்கி விட்டாய். இனி உன்னே நம்பிப் பயனில்லே நீ போகலாம் என்ருர்.

சின்னதம்பி குனிந்த தலேயுடன் தான்வந்தவழியே திரும்பிச்சென்ருன். அதேசமயம் அருணுசலத்தின்

மற்றொரு கையால் பெரியதம்பி தம் கைகளைக் கட்டியவாறு டணிவுடன் அவர் எதிரே வந்து நின்றான்.

பெரிய தம்பி எனக்கு எதிரியாகச் சிறுவன் ஒருவன் இவ்வூரில் நடமாடிக் கொண்டிருக்கிறான். அவனை ஒழித்தால் ஆயிரம் ரூபாய் தருகிறேன். இப்போது ஐநூறு பெற்றுக்கொள் என்று கூறிப் பணத்தைப் பெரியதம்பி யிடம் அளித்தார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட பெரியதம்பி சிறுவன் எப்படியிருப்பான் என்று அருணாசலத்திடம் வினவினான்.

நெற்றியில் திருநீறு அணிந்திருப்பான். பார்ப்பதற்கு நல்லதோற்ற முடையவன். முருகவேள் என்று பெயர் என்றார் அருணாசலம்.

சிறுவனை ஒழித்துவிட்டுப் பிறகு வந்து பார்க்கிறேன் என்று கூறி அங்கிருந்து அகன்றான் பெரியதம்பி.

இனி முருகவேள் தப்பமுடியாது. ஒழிந்துவிடுவான். என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டார் அருணாசலம்.

மறுநாள் பெரியதம்பி அவரருகேவந்துநின்று நீங்க சொன்னவேலையைச் செய்துமுடித்து விட்டேன் என்றான்.

என்ன ... முடித்து விட்டாயா ...

ஆமாம்.

எப்படி?

இன்று காலையில் நம் ஊருக்கருகில் உள்ள ஏரிக் கரைக்குப் போனேன். அங்கே சிறுவன் இருந்தான். வேறு யாரும் இல்லை. ஏரியில்தான் தண்ணீர் அதிகமாக

இருக்கிறதே... சிறுவனைத் தூக்கி தண்ணீரில் எறிந்து விட்டேன். மூழ்கி மூழ்கி எழுந்து தத்தளித்தான். உயிருக்காகப் போராடினன். பிறகு வெளியே வரவில்லை, இறந்து விட்டான்.

பெரியதம்பி...எப்படியோ சிறுவனை ஒழித்துவிட்டாய், என் மனமும் அமைதியுற்றது. நீ போகலாம்.

நீங்கள் தருவதாகச் சொன்ன பணம்...

பணமா...

ஆமாம் கொடுங்க.

இனி பணம் எதுவும் தரமுடியாது.

தரமுடியாதா முன்பு தருவதாகச் சொன்னீர்களே,

சொன்னேன் இப்போது முடியாது என்கிறேன், போய்விடு.

என்னைப் பகைத்துக் கொண்டு நீங்கள் வாழ முடியாது.

உன் மிரட்டலுக்கெல்லாம் அஞ்சுபவன் நானல்ல போ வெளியே.

போகிறேன், உங்களிடம் எப்படிப் பணம் பெறுவது என்று எனக்குத் தெரியும். எனக் கூறியவாறு அங்கிருந்து வெளியேறினன் பெரியதம்பி.

நாட்கள் இரண்டு சென்றன, சிறுவன் முருகவேள் ஒழிந்தான். நம்மைப் பணம் கேட்கவந்த பெரியதம்பியையும் விரட்டி விட்டோம், இனிக் கவலையில்லை. எனக் கருதியவாறுதம் ஊரைவிட்டுச் சிறிது தொலைவு தனிமையில் சென்று அமர்ந்த அருணசலம் இருள்சூழும் நேரத்தில் விரைவாக வீட்டிற்குச் செல்ல முனைந்தார். அப்போது அவர் பின்னே வந்த பெரியதம்பியும், சின்னதம்பியும்

அவரைப் பிடித்து இழுத்துச் சென்று அருகிலிருந்த ஓர் வீட்டிற்குள் தள்ளி அங்கிருந்த தூண் ஒன்றில் கட்டினர்

பெரியதம்பி என்னையா கட்டுகிருய் என்ருர்: அருணுசலம்.

உன்னைக் கட்டுவது மட்டுமல்ல, உன் உயிரையும் போக்கப் போகிறேன். என்ருன் பெரியதம்பி.

பணம் தருவதாகக்கூறி ஏமாற்றிய இவருக்குச் சரியான தண்டனை இவரின் உயிரைப் போக்குவதுதான் என்ருன் சின்னதம்பி.

இவரை நம்பி ஒரு பாவமும் அறியாத சிறுவன் முருகவேலை ஏரியில் தள்ளிக் கொன்று விட்டேன். முருகன் பெயரைக் கூறிப் பிறரை ஏமாற்றித் திரியும் இவரை ஒழித்தால் இந்த ஊரே நல்ல நிலையை அடையும்.

என்னைக் கொன்றுவிட முடிவு செய்து விட்டீர்களா.

ஆமாம் கத்தியால் குத்திக் கொன்றுவிடப் போகிருேம்.

கொன்றுவிடுங்கள் ஆனல்.

என்ன?

நான் வழிபடும் தெய்வத்தை எண்ணித் துதிக்கச் சிறுது நேரங் கொடுங்கள்,

உம் சீக்கிரம் தெய்வத்தை வழிபடு,

பெரியதம்பி இவ்விதம் கூறியதும் அருணுசலம் முருகப் பெருமானைத் தம் மனதில் எண்ணினுர்.

முருகா உன்னை உள்ளமுருக வழிபடாமல் உதட்டளவில் வழிபட்ட தன் பலன் எனக்குக் கிடைத்து விட்டது. என்னுடைய உயிர்போகப் போகிறது. நான் தீயசெயல்கள் புரிந்தவன். அதற்காக வருந்துகிறேன். என்னை மன்னித்து விடு, முருகா இப்பிறவியில் நான் நல்லவனுக இல்லாவிடினும் அடுத்த பிறவியிலாவது, நல்லவனுகப் பிறக்க அருள்புரிவாய் முருகா முருகா.

அருணுசலம் முருகனை வழிபட்டபின் பெரியதம்பியை நோக்கினுர். என்னைக் கொன்றுவிடு. நான் மடிவதற்குத் தயாராக இருக்கிறேன் என்ருர்.

பெரியதம்பி கத்தியை எடுத்து அவர்மீது பாய்ச்ச ஓங்கினுன், அப்போது.

நில் கொல்லாதே என்ற குரல் கேட்டு பெரியதம்பி திரும்பிப் பார்த்தான். எதிரே புன்னகை தவழும் முகத்துடன் சிறுவன் முருகவேள் நின்றிருந்தான்.

என்னை ஒழித்தால்தானே செல்வந்தர் உனக்குப் பணம் தருவார். நான் உயிருடன் இருக்கும் போது எப்படிப் பணம்தர இயலும். இதோ, நானே வந்து விட்டேன். என்னைக் கொன்றுவிட்டு அவரிடம் பணம் பெறுங்கள்.

சிறுவன் முருகவேள் பேச்சைக் கேட்டதும் பெரிய தம்பியின் கையிலிருந்த கத்தி தானுகக் கீழே விழுந்தது. அருணுசலம் தலைகவிழ்ந்து நின்ருர்.

முருகவேள் உன் பேச்சு என்னைக் கொல்லாமல் கொல்கிறது. பணத்திற்காக எதையும் செய்யத் தயங்காத இந்தப் பாவியை மன்னித்துவிடு.

அருணுசலம் குரல் தழுதழுக்கக் கூறினுர்.

முருகவேள் அவரின் கட்டுகளை அவிழ்த்து விட்டான்.

விழிகளில் நீர்பெருக முருகவேளைக் நோக்கிய அருணுசலம் முருகவேள் உன்னைக் கொல்லப் பலவழிகளை கையாண்டேன், அதையெல்லாம் நீ மறந்து இப்போது என் உயிரைக் காத்துவிட்டாய் நீ வந்திராவிடில் இவர்களால் நான் மடிந்திருப்பேன். நானும் இவர்களும் உருவத்தால்தான் உயர்ந்தவர்கள். உள்ளத்தால் சிறியவர்கள் நீயோ உருவில் சிறியவனுயினும் உள்ளத்தால் உயர்ந்தவன். என்னை மன்னித்துவிடு. இனி யாரையும் பகைவனுகக் கருதமாட்டேன். பிறருக்கு நன்மை செய்ய முற்படுவேன். என் தெய்வம் முருகன் மீது ஆணை. தீய செயல் புரிய என்றும் நினைக்கமாட்டேன் என்ருர்.

முருகவேள் எங்களையும் மன்னித்துவிடு, இன்று முதல் நாங்களும் திருந்திவிட்டோம். தீயசெயல்களை என்றும் செய்யமாட்டோம். இது உறுதி என்ருன் பெரிய தம்பி.

எங்கள் மனதையே மாற்றிவிட்டாய், இனி நற்செயல்களையே புரிவோம் என்ருன் பெரியதம்பி.

முருகவேள்... ஏரியிலிருந்து நீ எப்படித்தப்பினுய் என்பதை அறிய விரும்புகிறேன் என்ருன் பெரியதம்பி.

நீங்கள் என்னைத் தூக்கி ஏரியில் எறியும் போது என்னைக் கொல்வதற்குத் திட்டமிட்டிருக்கிறீர்கள் என எண்ணினேன். எனக்கு நன்ருக நீந்தத் தெரியும். அதனுல் ஏரியில் மூழ்குவது போல உங்களுக்குப் போக்குக்காட்டி நெடுந்தொலைவு சென்று கரையேறி விட்டேன், நான் இறந்து விட்டதாக நீங்கள் கருதிவிட்டீர்கள் அவ்வளவுதான்.

தம்பி,

என்ன?

என்னிடம் இருநூறு ரூபாய் கொடுத்தாயே அந்தப் பணம் உனக்கு எப்படிக் கிடைத்தது.

அது எனக்குக் கிடைத்த பரிசுப் பணம். செல்வந்தர் ஒருவர் பணப்பை ஒன்றைத் தவறவிட்டு விட்டார். அப்பை என்னிடம் கிடைத்தது. ஐயாயிரம் ரூபாய்களை உடைய பணப்பையை அந்த செல்வந்தரிடம் சேர்ப்பித்தேன். அவர் மகிழ்ச்சியுடன் இருநூறு ரூபாய் பணத்தை எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். நானும் பெற்றுக் கொண்டேன். தக்க சமயத்தில் அந்தப் பணம் பயன் பட்டது.

இந்தச் சிறுவயதில் உனக்குக் கிடைத்த பணத்தை நீ வைத்துக் கொள்ளாமல் பண ஆசையின்றிப் பிறர்க்கு உதவி செய்ததோடு, தீமை செய்த என்போன்ருேர்க்கு நன்மையே செய்த உன்னை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. உண்மையில் நீயார், எந்த ஊர்

எனக்கு நிலையான இடம் என்று ஒன்றில்லை. நான் இருக்குமிடமெல்லாம் என்னுடைய ஊர் என்று கருதுபவன், அதிகமாக மலைகளில்தான் இருப்பேன். நாளை சுவாமி மலையில் திருவிழா நடைபெற இருக்கிறது. இப்போது அங்கு செல்லப் போகிறேன் நாளை மாலை நீங்கள் மூவரும் வாருங்கள் என்னை அங்கே காணலாம்.

திருவிழாக் கூட்டத்தில் உன்னைக் காண முடியுமா

முடியும் என்னை எல்லோருக்கும் தெரியும். என் பெயரைக் கூறியதும் என்னிடம் அழைத்து வருவார்கள்.

முருகவேள் மூவரையும் ஒருமுறை நோக்கி விட்டுப் புன்னகையுடன் விரைவாகச் சென்று மறைந்து விட்டான்.

மூவரும் சிறுவனைப் பற்றிய எண்ணத்தில் மூழ்கியவாறு தம்தம் இல்லங்களை நோக்கிச் சென்றனர்.

திருவேரகம் என்று சான்ருேர்களால் புகழப்படும் சுவாமிமலை திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. எங்கும் [illegible]

கூக்குரல்களோடு முருகனைப் பற்றிய வாழ்த்தொலிகளும் எழுந்தவாறிருந்தன.

அருணுசலமும், பெரியதம்பி, சின்னதம்பி ஆகியோரும் மக்கள் கூட்டத்தில் நுழைந்து கோயிலை அணுகினர்.

பெரியதம்பி முருகவேளைக் காணவில்லையே எங்கே பார்ப்பது

அதுதான் எனக்கும் தெரியவில்லை.

இங்கு யாரிடமாவது கேட்டுப் பார்க்கலாம்.

சின்னதம்பி தன் அருகே இருந்த ஒருவரிடம் முருகவேளைப் பாரகக வேண்டும். எங்கே பார்க்கலாம் என வினவினுன்.

முருகவேளைத் தேடி அலைய வேண்டியதில்லை, கோயிலுக்குள் செல்லுங்கள். எளிதில் பார்க்கலாம் என்ருர் ஒருவர்.

கோயிலுக்குள் நுழைந்த மூவரும் முருகப் பெருமானை நோக்கினர்.

முருகவேளைக் காண முடியவில்லையே என்று எண்ணியவாறிருந்த அவர்களுக்கு இறைவன் சிறுவனுகக் காட்சி அளித்தார்.

புன்னகை தவழ அருள்புரியும் முகத்தைக் கண்டதும் முருகா முருகா எனக்கூவினர் மூவரும்.

சில நிமிடங்களுக்குப் பின் சிறுவன் நின்றிருந்த இடத்தில் சண்முகப் பெருமான் தோற்றமளித்ததைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனர்.

முருகா சிறுவனுக வந்து எங்களைத் திருத்தி நல்வழிப் படுத்திய தெய்வமே நீயே எங்களுக்குத் துணை. உன்னையன்றி வேறு துணை எவருமில்லை எனக்கூறினர். கோயிலில் ஒருவர் பாடிய பாடலைக் கேட்டு மூவரும் தம்மை மறந்து நின்றனர்.

"உலகத்தின் முதலாய் நின்ற
ஒருதனிப் பொருளே; போற்றி!
கலைகட்கும் உரை ஒண்ணுக்
கருணை வாரிதியே! போற்றி!
மலைவில் கைப்பெருமான் கண்ணில்
வந்த மாமணியே! போற்றி
புலைமைக்கும தலைமையான
புண்ணியா! போற்றி! போற்றி!"